Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# அழகர் கோயில் சிற்பங்களின் அருஞ்சிறப்புகள்

**ம. கிருஷ்ணராமா, பா. தரணி & வீ. கோபிநாத்**
**உளவியல் துறை, பூ. சா. கோ அர. கிருட்டிணம்மாள் மகளிர் கல்லூரி,கோவை**



19

**ஆய்வு சுருக்கம்** :

சங்க காலங்களிலும் சங்கம் மருவிய காலங்களிலும் மூவேந்தர்கள் சிற்பக்கலைகளை கட்டிக்காத்தானர். இந்த வகையில் மூவேந்தர்களில் ஒருவர் ஆன பாண்டியர் கால சிற்பங்கள் இன்றியமையாதது ஆகும். பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட குகைக்கோவில்களில் சிற்ப வேலைபாடுகள் நிறைந்துள்ளன. அவற்றைத் திருமயம், பிள்ளையார்பட்டி, குன்றக்குடி, திருப்பரங்குன்றம் முதலிய இடங்களில் உள்ள கோவில்களில் காணலாம் . கோவில்பட்டிக்கு மேற்கே கழுகுமலை வெட்டுவான் கோவிலில் அமைந்துள்ள சிற்பங்களும் பாண்டியர் காலச் சிற்பக்கலைக்கு சான்றுகளாகும். பாண்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட கோவில்களுள் மதுரை அழகர்கோவிலில் உள்ள சிற்பங்களின் அருஞ்சிறப்புகளைப் பற்றி விளக்குவதே இவ்வாய்வுக்கட்டுரை

**ஆய்வு நோக்கம்** :

மதுரை மாநகரின் அழகிற்கு அழகு சேர்க்கும் வகையில் அமைந்துள்ள அழகர் கோவிலின் அருஞ்சிறப்புகள் பற்றி ஆராய்வதே இநத ஆய்வுக்கட்டுரையின் நோக்கம்.

**முன்னுரை:**

சிற்பங்கள் செதுக்குவதையும், சிற்பங்களில் வெளிப்படும் அழகியலையும், மரபையும், நுட்பங்களையும் தமிழர் குறிக்கும் இக்கலை பண்டைக்காலம் முதற்கொண்டே வளர்த் தெடுக்கப்பட்டுள்ளது. சங்க காலத்தில் மண், மரம், தந்தம், கல் சிற்பங்கள் செதுக்கப்பட்டன. மண்ணில் சிற்பங்கள் உருவாக்கியவர்கள் ***"மண்ணீட்டாளர்கள்"*** *எனப்பட்டனர்.* ***"கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன-"*** என்று திவாகர நிகண்டு குறிப்பிடுகிறது.

**கோயிலின் அமைப்பு :**

தமிழ்நாட்டில் ஆழ்வார்களால் பாடப்பெற்ற வைணவத் திருப்பதிகளில் ஒன்று அழகர்கோயில் ஆகும். மதுரையில் இருந்து வடக்கு-வடகிழக்குத் திசையில் பன்னிரண்டு கல் தொலைவில் மேலூர் வட்டத்தை சேர்ந்தாகும் .இங்குள்ள சிற்றூர்க்கு "**அழகர்கோயில் ஊராட்சி**" என்னும் பெயர் உண்டு. இக்கோவில் பாண்டிய மன்னர்களால் கட்டப்பட்டது.

இக்கோவிலைச் சுற்றியுள்ள மலையின் தென்திசையில் கிழக்குத் திசையை நோக்கியதாக அழகர் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில் இரண்டு கோட்டைகளால் சூழப்பட்டுப்பள்ளது. அதில் வெளித்துகாட்டைப் பகுதியில் உள்ள சாலையில் கீழ்ப்புறத்தில் தேர்மண்டபம் உள்ளது. அங்குள்ள ஒரு கம்வெட்டில் **'அமைந்த நாராயணன்'** என்னும் தேர் உள்ளது.உட்கட்டமைப்பு வாசலான இரணியன் கோட்டைப்பகுதி ஆண்டார் மண்டபம் எனப்படும். பின்பு இங்கு படியேற்ற மண்டபத்தை தாண்டினால் கொடிக் கம்பத்தையடுத்துள்ள ஆரியன் மண்டபத்தையடையலாம். பின் அங்கிருந்து மகாமண்டபமான முனையதரையன் திருமண்டபத்தை அடையலாம். ஒரு கல்வெட்டில், இதன் பெயர் **"அலங்காரன் திருமண்டபம்** என குறிக்கப்பட்டுள்ளது.

இங்குள்ள கருவறையில் "**நங்கள் குன்றம்**" என்னும் சிறிய வட்டவடிவில் உள்ள கருவறையில் சீதேவி, பூதேவி ஆகிய தேவியருடன் கீழக்கு நோக்கிய வண்ணம் அழகர், **சுந்தரராஜர்** என்னும் பெயரில் காட்சி தருகிறார்.

**அழகர் கோயிலில் பெருமாளின் பல்வேறு தோற்றங்கள் :**



**நரசிம்மர்:**

நரசிம்ம வழிபாடு கோவிலில் குறிப்பிடத்தக்கது. இக்கோயிலில் இரண்டு நரசிம்மர் காணப்படுகின்றன. அவை

1.யோக நரசிம்மர்

2.லெட்சுமிநரசிம்மர் ஆவர்.

யோக நரசிம்மருக்கு நேராக கற்கூரையில் ஒரு திறப்பு வைத்துள்ளனர். நாள்தோறும் இச்சிலைக்கு எண்ணெய்க் காப்பிடுகின்றனர். யோக நரசிம்மரின் சினம் ஆவியாகி மேலே கற்கூரையிலுள்ள திறப்பு வழியாக வெளியேறுவதாகக் கூறுகின்றனர்.

இது தவிர லெட்சுமிநரசிம்மர் உள்ளார். கல்யாண மண்டபத்தில் மேலும் இரண்டு

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

நரசிம்மர்களுள் ஒருவர் ஹிரண்ய அரக்கனைப் பிடித்துக் கொண்டிருப்பதாகவும், மற்றொன்று அவனைக் கொல்வதாகவும் காட்டப்பட்டுள்ளது. இதன் மூலம் நரசிம்ம வழிபாடு இங்கு முக்கியமானது என அறியப்பெறலாம்.

**சக்கரத்தாழ்வார்:**

திருமாலின் போர் கருவியாகிய திருவாழி ஆழ்வார்க்கு இக்கோயிலில் ஒரு சன்னதி உண்டு . இக்கோயில் கல்வெட்டு ஒன்று மலைமீதிருந்த திருவாழி ஆழ்வார் கோயிலை குறிப்பிடுகிறது.

அனைத்து திருமால் கோயிலுக்குரிய நிலங்களில் திருமாலின் சக்கரம் பொறிக்கப்பட்ட கல்லை நடுவது வழக்கம் இதற்கு. "**திருவாழிக்கல்**" என்னும் பெயர் உண்டு.

**மூலவர் சிற்பத்தின் தனிச்சிறப்பு:**

இக்கோயிலில் மூலத்திருமேனியாக விளங்கும் திருமால் கையிலுள்ள சக்கரம், சுற்றிச் செல்லும் நிலையில் இருக்கும். பொதுவாக வைணவக் கோயில்களில் திருமால் கையில் சக்கரம் அணியாகவே விளங்கும் செல்லும் நிலையில் இருப்பதில்லை. இக்கோயிலில் இது ஒரு விதிவிலக்காகும்.



**கள்ளழகர்:**

கள்ளழகர் என்னும் பெயர் நாட்டுபுற மக்களால் பாடப்பெறும் வாணிப்புப் பாடல்களில் காணப்படுகிறது. ஆண்டுத்தோறும் நிகழும் சித்திரைத் திருவிழாவில் "**ஸ்ரீ சுந்தரராஜன் கள்ளழகர்**" என்னும் கோலத்தில் எழுந்தருளுவார் என்பது குறிப்பிடத்தக்கது. அந்த நிகழ்ச்சியை "**கள்ளர் திருக்கோலம்**" என்று கூறுவர். இவரின் தோற்றம் ஆனது கையில் வளதடி என்னும் வளரித்தடி, மற்றொரு கையில் சாட்டைக்கம்பும், ஆண்கள் அணியும் கொண்டையும் தலையில் உருமால் மற்றும் கல்வைத்துக்கட்டிய வளையம் போன்று கடுக்கன், அணிந்து "காங்கு" என்னும் ஒரு கருப்பு புடைவையால் சுற்றப்பட்டிருக்கும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513




**<u>பதினெட்டாம்படிக் கருப்பசாமி :</u>**

இக்கோயிலின் தலைவாசலில் பதினெட்டாம் படி கருப்பசாமி கோவில் அமைந்துள்ளது. இக்கதவு எப்போதும் அடைக்கப்பட்டிருக்கும். இந்த கதவுகளுளுக்கு சந்தனம், குங்குமம், கற்பூரம் என்று பொருட்களை கொண்டு பூஜை செய்வார்கள் இக்கதவு **பிரம்மோத்ஸவ காலத்தில்** சக்கரத்துராழ்வார் வருவதற்கு மட்டும் திறக்கப்படும்.

இது வருடத்திற்கு ஒரு முறை நிகழும். சந்தனம் பூண்ட கதவுகளை கொண்ட கருப்பசாமிக்கு உருவம் இல்லை. ஆனால் இங்குள்ள தெய்வதிற்கு எண்ணியவாறு உருவம் கொண்டு பூஜை மேற்கொள்வர். பிற இடங்களில் இவர் கையில் ஒரு அரிவாளும், கதாயுதமும், ஈட்டி முதலியவையும் இருக்கும். காலில் செருப்பு அணிந்திருப்பார் .இவரது தரிசனம் பயங்கரமாகவும், யுத்தபாவனையிலும் இருக்கும் என்று வரலாறு கூறுகின்றது.

இவரது சன்னதி கோயில் மதிற்சுவரோடு அமைந்த ராஜகோபுரத்துக்கும் கீழுள்ள இரட்டைக்கதவு உட்புறமாக தாழிட்டு சாத்தப்பட்டுள்ளது. நாற்பதடி நீளம் இருபுறமும் உயர்ந்த சுவர்களும் கொண்டு மேற்கூரையில்லாமல் இருக்கும் .மேற்படியில் ஓரத்தில் முன்றடி உயரப்பிடியின்மேல், சமார் எட்டு அடி உயர்த்தில் அரிவாள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. மக்கள் இதனை தெய்வமாக சந்தனம் பூசி வழிப்பட்டு வருகின்றனர்.

**<u>இலக்கியங்களில்அழகர்கோயில்</u> :**

1. **<u>பரிபாடல்:</u>**

சங்க இலக்கியங்களும் இக்கோயிலைப் பற்றி விரிவாகக் கூறுகின்றன. இவற்றுள் பரியமல் இத்தலத்தினை "**மாலிருங்குன்றம்**" என்பர்

***ஏறுதல் எளிதோ, வீறு பெறு துறக்கம்?***
***அரிதின் பெறு துறக்கம் மாலிருங்குன்றம்***
***எளிதின் பெறல் உரிமை ஏத்துகம், சிலம்ப*** *(பரிபாடல் 15)*

ISSN:2582-9513
Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)

**<u>சிலப்பதிகாரம் :</u>**

இக்கோயிலமைந்த மலையினைத் "**திருமால் குன்றம்**" என்று வழங்குகின்றன.

***திருமால் குன்றத்துச் செல்குவி ராயின்***
***பெருமால் கெடுக்கும் பிலமுண் டாங்கு***
***விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபிற்***
***புண்ணிய சரவணம் பவகா ரணியோடு***
***இட்ட சித்தி யெனும்பெயர் போகி***
***விட்டு நீங்கா விளங்கிய பொய்கை***
***முட்டாச் சிறப்பின் மூன்றுள வாங்குப்***
***புண்ணிய சரவணம் பொருந்துவி ராயின்***

*( சிலம்பு 11:91-98 மதுரைக் காண்டம்,காடுகாண் காதை*)

**3. <u>ஆழ்வார்கள்</u>**

ஆழ்வார்களில் ஐவர் இக்கோயிலைப் பாடியுள்ளனர் முதலாழ்வார்களில் ஒருவரான பூதத்தாழ்வாரும், ஆண்டாள், பெரியாழவார், நம்மாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் மொத்தம் **108 பாசுரங்களில்** இக்கோயிலைப் பாடியுள்ளனர்.

**<u>அழகர் கோவில் திருவிழாக்கள்:</u>**



அழகர் கோயிலில் புகழ்பெற்ற திருவிழா என்று அழைக்கப்படுவது **சித்திரைத்திருவிழா.** மதுரையில் ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரை திருவிழாவிற்கு "**திருவிழாக்களின் திருவிழா**" என்று புகழ்மொழியுண்டு. இதை வெறும் சைவ-வைணவ சமயங்களின் விழவாக மட்டும் கூறிவிட முடியாது மீனாட்சி கோவில் கொடியேற்றத்தில் துவங்கி அழகர் மீண்டும் மலைக்கு திரும்பும் வரை மொத்தம் 16 நாட்கள் நடக்கும். இத்திருவிழாவில் பெரும் பொருளாதார சுழற்சியும், சமூக தொடர்பும் நிகழ்கின்றன.

தன் தங்கை மீனாட்சியின் திருமணத்திற்காக சீர்வரிசைகளுடன் மதுரை வருகிறார் கள்ளழகர். ஆனால் அவர் வரும் முன் கல்யாணம் முடிந்து விட்டதால் கோபித்துக் கொண்ட அவர் வைகையாற்றில் இறங்கி குளித்துவிட்டு பின்னர் வண்டியூரில் தன் காதலி விட்டில் தங்கிவிட்டு மீண்டும் ஆழகர்

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

மலைக்கு திரும்பி விடுவது ஒரு பெருவிழாவாக நிகழும். விழாவிற்கு முன்னதாக அழகர் வேடமிடுவதற்கான பிரத்யேக உடைகளை, உபகரணங்களை, புதுமண்டபத்தில் வாங்குவது, தேர் முட்டி அருகே ஆட்டுத் தோலில் செய்யப்பட்ட பையை வாங்கி துருத்தி நீர் தெளிக்க பயன்படுத்துவது, திரியெடுத்து ஆடுவது, நீர்-மோர் பந்தல்கள் அமைப்பது என்று எல்லா மக்களும் அழகரை காண ஒன்றாக கூடும் நிகழ்வாகும்.

இருப்பினும் அழகரின் பயணத்திற்கு காரணமாக மண்டூக முனிவருக்கு சாபவிமோசனம் அளிப்பதற்காக வண்டியூர் அருகில் உள்ள தேனூர் மண்டபத்திற்கு ஆண்டாள் சூடிக்கொடுத்த மாலையை பெற்றுகொள்ள பெருமாள் கோவிலுக்கு வந்ததாகவும் காரணம் உண்டு என்று கருதப்படுகின்றது .

<u>முடிவுரை</u> :

இவ்வாய்வு கட்டுரையில் மதுரையில் உள்ள அழகர் கோவிலின் சிறப்புகளை பற்றி கண்டோம். பாண்டிய மன்னர்களால் இந்த கோவில் மதுரை மாவட்டத்தில் இருந்து 21 கிலோமீட்டர் தொலைவில் உள்ள அழகர் மலை அடிவாரத்தில் அமைந்துள்ளது. இந்தக் கோவிலை சுற்றி இரணியன் கோட்டை மற்றும் அழகாபுரி கோட்டை அமைந்துள்ளது.

இங்குள்ள **"நங்கள் குன்றம்"** என்ற கருவறையில் அழகர், சுந்தரராஜர் என்னும் பெயரில் காட்சியளிக்கிறார். இக்கோவிலில் யோக நரசிம்மர், லெட்சுமி நரசிம்மர் என்று இரண்டு நரசிம்மர்கள் காணப்படுகின்றன. இங்கு மட்டும் இரண்டு நரசிம்மர்கள் வைத்து வழிபடுவது இக்கோவிலுக்கு தனிச் சிறப்பாகும்.

பொதுவாக வைணவ கோவில்களில் திருமாலின் கையில் உள்ள சக்கரம் வெறும் அணி ஆகவே அமைந்திருக்கும். ஆனால் மதுரை அழகர் கோவிலில் மட்டும்தான் பெருமாளின் கையில் உள்ள சக்கரம் செல்லும் நிலையில் இருக்கும். இது இக்கோவிலுக்கு மேலும் ஒரு தனிச்சிறப்பாகும். ஆண்டுதோறும் நடைபெறும் சித்திரை திருவிழாவில் கள்ளழகர் , **"ஶ்ரீ சுந்தரராஜன் கள்ளழகர்"** என்னும் திருக்கோலத்தில் எழுந்தருளுவார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆடி மாத பௌர்ணமி நாட்களில் அழகர் கோவிலில் எழுந்தருளி இருக்கும் காவல் தெய்வமான பதினெட்டாம்படி கருப்பண்ணசாமி கோவில் கதவுகளுக்கு சந்தனம் சாத்தும் நிகழ்ச்சி நடைபெறும்.இக்கோவிலின் கருப்பசாமிக்கு உருவம் இல்லை. ஆனால் இங்குள்ள தெய்வதிற்கு எண்ணியவாறு உருவம் கொண்டு பூஜை மேற்கொள்வர். பெரு தெய்வ வழிபாடு கோவில்களில் சிறு தெய்வங்களுக்கும் மக்கள் முக்கியத்துவம் கொடுத்து வந்தார்கள் என்பதை இதன் மூலம் அறியலாம்.

**<u>மேற்கோள்கள்</u>** :

**கல்லும் உலோகமும் செங்கல்லும் மரமும் மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும் கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை பத்தே சிற்பத் தொழிற்கு உறுப்பாவன-** திவாகர நிகண்டு

**துணை நூற்பட்டியல்** :


1. புத்தகம்: அ. தட்சிணாமூர்த்தி. (1994). *தமிழர் நாகரிகமும் பண்பாடும்.* சென்னை: ஐந்திணைப் பதிப்பகம்.
    - புத்தகம்: அழகர் கோயில்- தொ.பரமசிவன்(2021)
    - அழகர்கோயிலின் அமைப்பு (பக்கம் 15)
    - அழகர்கோயிலின் தோற்றம்(பக்கம் 27)
    - பதினெட்டாம்படிக் கருப்பசாமி (பக்கம் 236)
    - இலக்கியங்களில் அழகர்கோயில் (பக்கம் 37)
2. பரிபாடல்-இளம்பெருவழுதியார்-கடவுள் வாழ்த்து-ப.எண் 15.
3. சிலப்பதிகாரம்- இளங்கோவடிகள்-மதுரைக் காண்டம்-காடுகாண் காதை-ப.எண் 11:91-98.
4. சித்திரைத் திருவிழாவும் பழமரபு கதையும்( பக்கம் 199)
5. டாக்டர் அம்பை மணிவண்ணன் எழுதிய “கோயில் ஆய்வும் நெறிமுறைகளும்” நூல் பக்கம்: 187.